## முக்கிய குறிப்புகள்

| | |
|---|---|
| **கரைசல்** | ***கரைசல்*** *என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்களைக் கொண்ட ஒருபடித்தான கலவை.*<br>❋ **கரைபொருள் :** ஒரு கரைசலில் குறைந்த அளவு எடை கொண்ட கூறு.<br>❋ **கரைப்பான் :** ஒரு கரைசலில் அதிக அளவு எடை கொண்ட கூறு.<br>❋ **கரைத்தல் :** ஒரு கரைப்பானில் கரைபொருளானது சீராக விரவி கரைவதே ஆகும். |
| **கரைசலின் வகைகள்** | **கரைசலின் கூறுகளை அடிப்படையாகக் கொண்ட வகைப்பாடு**<br>***இருமடிக்கரைசல் :*** இரண்டு கூறுகளைக் கொண்டிருக்கும் கரைசல்.<br>***மும்மடிக்கரைசல் :*** மூன்று கூறுகளைக் கொண்டிருக்கும் கரைசல்.<br>**கரைபொருள் மற்றும் கரைப்பானின் இயற்பியல் நிலையை அடிப்படையாகக் கொண்ட வகைப்பாடு**<br>*திண்மக் கரைசல்:* • திண்மம் – திண்மம் *எ.கா :* உலோகக் கலவை • திரவம் – திண்மம் *எ.கா :* இரசக் கலவைகள்<br>*திரவக் கரைசல்:* • திண்மம் – திரவம் *எ.கா :* நீரில் கரைக்கப்பட்ட NaCl கரைசல் • திரவம் – திரவம் *எ.கா :* நீரில் கரைக்கப்பட்ட எத்தில் ஆல்கஹால் • வாயு – திரவம் *எ.கா :* சோடா நீர்<br>*வாயுக் கரைசல்:* • திரவம் – வாயு *எ.கா :* மேகம் • வாயு – வாயு *எ.கா :* $He\text{-}O_2$ வாயுக்கலவை<br>**கரைப்பானின் தன்மையை அடிப்படையாகக் கொண்ட வகைப்பாடு**<br>***நீர்க்கரைசல் :*** நீர் கரைப்பானாக செயல்படும் கரைசல்.<br>***நீரற்ற கரைசல் :*** நீரைத் தவிர, பிற திரவங்கள் கரைப்பானாக செயல்படும் கரைசல்.<br>**கரைபொருளின் அளவை அடிப்படையாகக் கொண்ட வகைப்பாடு**<br>***தெவிட்டிய கரைசல் :*** ஒரு கரைசலில் மேலும் கரைபொருளை கரைக்க இயலாத கரைசல்.<br>***தெவிட்டாத கரைசல் :*** தெவிட்டிய கரைசலைவிடக் குறைவான கரைபொருளைக் கொண்ட கரைசல். *வகைகள் :* செறிவுமிக்க கரைசல் மற்றும் நீர்த்த கரைசல்<br>***அதிதெவிட்டிய கரைசல் :*** தெவிட்டிய கரைசலைவிட அதிகமான கரைபொருளைக் கொண்ட கரைசல். |
| **கரைசலின் செறிவு** | கொடுக்கப்பட்ட கரைசலில் அல்லது கரைப்பானில் கரைந்துள்ள கரைபொருளின் அளவு ஆகும். |
| **ஈரம் உறிஞ்சும் சேர்மங்கள்** | சேர்மங்கள் சாதாரண வெப்பநிலையில், வளிமண்டலக் காற்றுடன் தொடர்பு கொள்ளும் போது அதிலுள்ள ஈரத்தை உறிஞ்சுகிறது. மேலும், இயற்பியல் நிலை மாறுவதில்லை. ***எ.கா :*** சுட்ட சுண்ணாம்பு (CaO). |
| **ஈரம் உறிஞ்சிக் கரையும் சேர்மங்கள்** | சேர்மங்கள் சாதாரண வெப்பநிலையில், வளிமண்டலக் காற்றுடன் தொடர்பு கொள்ளும் போது அதிலுள்ள ஈரத்தை உறிஞ்சி முழுவதும் கரைகின்றன.<br>***எ.கா :*** பொட்டாசியம் ஹைட்ராக்ஸைடு (KOH). |

## நீரேறிய உப்புகள்

| பொதுப்பெயர் | IUPAC பெயர் | மூலக்கூறு வாய்ப்பாடு |
|---|---|---|
| **மயில் துத்தம்** | காப்பர் II சல்பேட் பென்டாஹைட்ரேட் | $CuSO_4 . 5\,H_2O$ |
| **பச்சை விட்ரியால்** | இரும்பு II சல்பேட் ஹெப்டாஹைட்ரேட் | $FeSO_4 .7\,H_2O$ |
| **வெள்ளை விட்ரியால்** | ஜிங்க்சல்பேட் ஹெப்டாஹைட்ரேட் | $ZnSO_4 . 7\,H_2O$ |
| **எப்சம் உப்பு** | மெக்னீசியம் சல்பேட் ஹெப்டாஹைட்ரேட் | $MgSO_4 . 7\,H_2O$ |
| **ஜிப்சம்** | கால்சியம் சல்பேட் டைஹைட்ரேட் | $CaSO_4 . 2\,H_2O$ |

★ கரைதிறன் $= \dfrac{\text{கரைபொருளின் நிறை}}{\text{கரைப்பானின் நிறை}} \times 100$

★ நிறை சதவீதம் $= \dfrac{\text{கரைபொருளின் நிறை}}{\text{கரைபொருளின் நிறை} + \text{கரைப்பானின் நிறை}} \times 100$

★ கனஅளவு சதவீதம் $= \dfrac{\text{கரைபொருளின் கனஅளவு}}{\text{கரைபொருளின் கனஅளவு} + \text{கரைப்பானின் கனஅளவு}} \times 100$